# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 125 of 2023

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.தனசேகரன் |
| தந்தை பெயர் | : | திரு.ஆறுமுகம் |
| வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 01.09.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனது பெரியப்பா பெயர் சீனுவாசன் என்றால் சரிதான். அவருக்கு தண்டபாணி மற்றும் கருத்தக்கண்ணன் என்று இரண்டு பிள்ளைகள் என்றால் சரிதான். தண்டபாணிக்கு முருகன் மற்றும் ஞானகுரு என்று இரண்டு பிள்ளைகள் என்றால் சரிதான். நான் T-புதுப்பாளையம் ஊரைச் சேர்ந்தவர். சீனுவாசன், தண்டபாணி, கருத்தக்கண்ணன், ஞானகுரு மற்றும் முருகன் அனைவரும் T-புதுப்பாளையத்தைச் சேர்ந்தவர்கள்தான். 1-ம் பிரதிவாதியும் அதே ஊரைச் சேர்ந்தவர்தான். காசிநாதன் சகோதரர் பெயர் சேகர் ஆகும்.

2. 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். எனது தகப்பனார் ஆறுமுகம் எனக்கு 3 வயது இருக்கும்போதே இறந்துவிட்டார். எனக்கு தற்போது 40 வயதாகிறது. சுமார் 37 வருடங்களுக்கு முன்பு எனது தகப்பனார் இறந்துவிட்டார். வா.த.சா.ஆ.1 நான் பிறப்பதற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதில் உள்ள ஷரத்துபடி சொத்தை எனது தகப்பனார் சுவாதீனம் எடுத்துக்கொண்டாரா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு 18 வயது முடிந்து 22 வருடங்கள் ஆகிறது.

3. வா.த.சா.ஆ.1ஐ தவிர நானோ, எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ சொத்தை அனுபவித்து வந்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே ஊரில் தாவா சொத்தை தவிர எங்களுக்கு வேறு சொத்துக்கள் உண்டு. சேகர் என்பவரிடம் நான் விற்ற சொத்து எனது பாகத்திற்கு சேர்ந்ததாகும். நான் விற்பனை செய்த சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சுமார் 200 அடி தூரம் இருக்கும். தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் இருந்துவந்தது என்று எனக்குத் தெரியும்.

4. வழக்கு சொத்தில் 2023-ம் ஆண்டு ஜீன் மாதத்தில் எங்கள் தரப்பில் எள் பயிர் எதுவும் செய்யவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு நான் தைல மரம் வைத்திருந்ததை பிரதிவாதிகள் பிடுங்கி போட்டுவிட்டு அவர்கள் பயிர் வைக்க வந்தார்கள். அவ்வாறு 6 வருடங்களுக்கு முன்பு பிரச்சனை நடந்தபோது பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் என்ன உரிமை என்று நான் 1-பிரதிவாதியிடம் கேட்டேன். அதற்கு அவர் தான் சீனுவாசன் மகன் தண்டபாணியிடம் கிரயம் பெற்றுவிட்டதாக கூறிவிட்டார். 6 வருடங்களுக்கு முன்பே நான் வழக்கு சொத்திற்கு வில்லங்கம் போட்டுப் பார்த்தேன். அதில் பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய விபரம் இருந்தது. நான் போட்டுப் பார்த்த வில்லங்கச் சான்றிதழில் அடமானம் எதுவும் காண்பிக்கப்படவில்லை. மேற்படி வில்லங்கச் சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த வில்லங்கச் சான்றிதழில் வில்லங்கச் சான்றிதழில் வா.த.சா.ஆ.1 பற்றிய விபரம் தென்படவில்லை.

5. வழக்கு சொத்தின் புதிய சர்வே நெம்பர்.105/6.ஆகும். பழைய சர்வே நெம்பர் எனக்கு தெரியவில்லை. சர்வே நெம்பர் 105/6 ன் மொத்த விஸ்தீரணம் 70 செண்டு ஆகும். 1-ம் பிரதிவாதி மேற்படி 70 செண்டு நிலத்தை 2 பத்திரங்களாக கிரயம் பெற்ற விபரம் வில்லங்கச் சான்றிதழில் காண்பித்தது. தண்டபாணி மேற்படி சொத்தை வங்கியிடம் பயிர்கடன் பெறுவதற்காக அடமாணம் வைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி பயிர்கடன் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி அடமாணம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகுதான் 1ம் பிரதிவாதியிடம் வழக்கு சொத்து விற்கப்பட்டது என்றால் சரிதான்.

6. ஆறுமுகம், தண்டபாணி இருவரும் 70 செண்டு நிலத்தை அனுபவித்து வந்ததன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்தை விற்பணை செய்தார்கள் என்றால் சரியல்ல. நான்தான் அனுபவித்துவந்தேன். மேற்படி நிலத்தை 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற நாள்முதல் இன்றுவரை அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. கடந்த இரண்டு ஆண்டுகளாக தான் 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார். எனது அனுபவத்தை காண்பிக்கும் வருவாய் ஆவணங்கள் என்னிடம் உள்ளது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது பெயரில் பட்டா உள்ளது.

7. பொதுவாக பட்டா ஒருவருக்கு கொடுப்பதற்கு முன்பு அதைப்பற்றி வருவாய்த் துறை அலுவலர்கள் அதைப்பற்றி விசாரித்து பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். 70 செண்டு நிலத்திற்கும் 1ம் பிரதிவாதி பெயரில்தான் பட்டா உள்ளது. 1ம் பிரதிவாதி 2008-ம் ஆண்டு கிரயம் வாங்குவதற்கு முன்பே அவர் பெயரில் வழக்கு சொத்து சம்மந்தமாக 2004-ம் ஆண்டு அவர் பெயரில் பட்டா மாறியுள்ளதாக எனது வழக்குரையில் எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சாட்சி மௌணமாக உள்ளார். 08.11.2015-அன்றுதான் 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சாட்சி மௌணமாக உள்ளார்.

8. வா.த.சா.ஆ.1 படி எனது தாத்தா வழக்கு சொத்தை சுவாதீனம் எடுக்கவில்லை என்றாலும், சீனுவாசன் மற்றும் அவரது வாரிசுகள்தான் தொடர்ந்து அனுபவித்து வந்தார்கள் என்றாலும் சரியல்ல. ஒவ்வொரு நபரும் தனித்தனியாக இடத்தை அவரவர் சௌகரியத்திற்கு பிரித்து தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அதன்படிதான் தாவா சொத்திற்கு அருகே எனக்கு தனியாக இடம் ஒதுக்கித் தரப்பட்டது என்றாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.1படிதான் அனுபவித்து வருகிறோம்.

9. எனது தாத்தா, தகப்பனார் மற்றும் எங்களுக்கு தெரிந்தே 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் அவ்வபோது சென்று நான் பிரச்சனை செய்து வருவேன். 1ம் பிரதிவாதியிடம் எங்கள் தரப்பில் எந்த காலத்திலும் எந்த பிரச்சனையும் நாங்கள் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம்

இருந்து சட்ட முரணான பலன் பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் கூறியுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.